3rd March 1966]

THE HON. SRI V. RAMAIAH : (*a*) No.

(*b*) Does not arise.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : குழந்தைகள் பால் உணவு உற்பத்தி செய்கிற அமுல் ஸ்தாபனத்தார் கோயம்புத்தூர் பகுதியில் நீலகிரியில் கிடைக்கிற பாலையும், கோயம்புத்தூரில் கிடைக்கிற பாலையும் வைத்துக் கொண்டு அங்கு இதற்கு ஒரு சென்டர் ஏற்படுத்த பார்வையிட்டார்களா ? அது சம்பந்தமாக மாநில சர்க்கார் என்ன உதவி செய்தது ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்ட நிபுணர்கள் கோவை, மற்ற இடங்களைப் பார்த்தார்கள். அங்கு உபரிப் பால் இருப்பதுபோலவும், ஆகவே மில்க் பவுடர் உற்பத்தி செய்யலாம் என்றும் ஆலோசனை சொன்னார்கள். அவர்கள் இந்த உதவி பெற ''யுனிஸெஃப்'' இடம் அணுகலாம் என்று குறிப்பு கொடுத்தார்கள். ஆனால் ''யுனிஸெஃப்'' லிருந்து வந்து பார்த்தவர்கள் அங்கு உற்பத்தியாகும் பால் ''லிக்விட் மில்க்'' ஆக இருக்கவே போதுமானதாகயில்லை. ஆகவே, பால் பவுடர் செய்யும் முயற்சியில் இந்த நேரத்தில் ஈடுபட வேண்டாம் என்று ஆலோசனை சொன்னார்கள்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : பம்பாயில் ஒரு பால் பவுடர் தொழிற்சாலை வைத்திருக்கிறார்கள். அங்கு நிபுணர்களைப்போட்டுச் செய்தார்களோ என்னவோ தெரியாது. பற்றாக்குறை இருக்கிற இந்த நேரத்தில் எங்கே யாவது ஒரு இடத்தில் இப்படிப்பட்ட ஒரு தொழிற்சாலையை வைக்க ஏன் தயக்கம் காட்டுகிறார்கள்.?

கனம் திரு. வெ. ராமைய்யா : பால் பற்றாக்குறை இருக்கிறபோது பவுடர் எப்படிச் செய்வது என்பதுதான் பிரச்னை.

தென்னாற்காடு கூட்டுறவு மத்திய பாங்கு

*163. **கேள்வி—திரு. ஆ. தங்கவேலு :** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) தென்னாற்காடு மாவட்ட கூட்டுறவு மத்திய பாங்கு 1964–65-ல் ஆடிட் செய்யப்பட்டதா ?

(இ) ஆம் எனில், பணம் தவறான முறையில் வழங்கப்பட்டிருப்ப தாக கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : (அ) ஆம்.

(இ) இல்லை.

புதுக்கோட்டை மத்திய கூட்டுறவு விற்பனை சங்கம்

*164 **கேள்வி—திரு. பி. முருகையன் :** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா:—

(அ) புதுக்கோட்டையில் உள்ள மத்திய கூட்டுறவு விற்பனை சங்கத்தில் உர ஊழல் சம்பந்தமாக அதிகாரிகள் யாரேனும் 1965 டிசம்பரில் கைது செய்யப்பட்டார்களா ?

(இ) அதன்மேல் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : (அ) ஆம்.

(இ) இது குறித்துப் போலீஸ் புலனாய்வு நடத்தி வருகிறது.

திரு. பி. முருகையன் : புதுக்கோட்டை சென்ட்ரல் பாங்க் தலைவர் அவர்கள் புதுக்கோட்டையில் உள்ள சென்ட்ரல் ஸ்டோரில் எந்தவிதமான அங்கமும் வகிக்க கூடாது என்று சர்க்கார் விதி இருந்தும் அவர் அந்த சென்ட்ரல் ஸ்டோரில் உதவித் தலைவராக இருப்பதினால்தான் இந்த